| 1. | திரு. ஆர். சங்கரலிங்கம்,<br>எண். 186, மேல ரத்னா வீதி,<br>விருதுநகர், விருதுநகர் மாவட்டம். | இணை செயலாளர், மணிலா அண்ணா தொழிற்சங்க பேரவை. |
| 2. | திரு. கே.,ரவி,<br>எண். 4பி/7, 13வது குறுக்குத் தெரு,<br>புதுக் காலனி, குரோம்பேட்டை,<br>சென்னை—44. | தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி |
| 3. | திரு. ஏ.எஸ். அருணாச்சலம்,<br>எண். 4/174, முத்தம்மாள் காலனி<br>2—வது தெரு, தூத்துக்குடி. | அண்ணா பொது தொழிலாளர் சங்கம்,<br>தூத்துக்குடி மாவட்டம். |
| 4. | திரு. ப்பி.எம். குமார்,<br>எண். 3121, தமிழ்நாடு வீட்டு வசதி<br>வாரியக் குடியிருப்பு, விழுப்புரம்,<br>மதுரை—625 011. | சி.ஐ.ட்டி.யு |
| 5. | திரு. ப்பி. எழில்மணி இன்பராஜ்,<br>எண் டி.—1, டர்ன்புல்ஸ் ரோடு,<br>3வது குறுக்குத் தெரு,<br>நந்தனம்,<br>சென்னை—600 035. | இந்தியக் குடியரசுக் கட்சி |

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

*(தமிழாக்கம்)*

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிப்பெயர்ப்பு)த் துறை.*

(வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி (UD4(2)த் துறை

**அறிவிக்கை**

*அரசாணை (நிலை) எண். 158, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் (UD4(2)த் துறை, நாள் 12 ஜூலை 2012.*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டமிடல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், திருப்பூர் உள்ளூர் திட்டப் பகுதியில் மேலும் சில பகுதிகளைச் சேர்க்கும் எண்ணத்தில் கீழ்க்கண்ட திருத்தம், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளூர் நிருவாகத் துறையின் அறிவிக்கை எண். II(2) RUL/3096—74, 26 ஜூன், 1974 அன்று ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம் II, பிரிவு 2—இல் 349 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த வரைவுத் திருத்தம், ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு மாதங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன காலஅளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக உள்ளூர் பகுதிகளிலுள்ள யாதொரு குடியிருப்பாளரிடமிருந்து அல்லது யாதொரு உள்ளூர் அதிகார மன்றத்திடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை, தமிழ்நாடு அரசு உரியவாறு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை, அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித்துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**வரைவுத் திருத்தம்.**

மேற்சொன்ன அறிவிக்கையில், ‘‘அட்டவணை’’க்குப் பதிலாக, பின்வரும் அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அவையாவன:—

**உள்ளூர் திட்டப் பகுதியாக அமையும் பகுதி**

| *தொ. எண்* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்.* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | திருப்பூர் உள்ளூர் திட்டமிடல் பகுதி | **திருப்பூர் வட்டம்** |
| | | 1. பொங்குபாளையம் |
| | | 2. கணக்கம்பாளையம் |

**உள்ளூர் திட்டப் பகுதியாக அமையும் பகுதி**

| *தொ. எண்* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. *தொடர்ச்சி.—* | *திருப்பூர் உள்ளூர் திட்டமிடல் பகுதி.—தொடர்ச்சி* | ***திருப்பூர் வட்டம்.***—*தொடர்ச்சி* |
| | | 3. நெருப்பெரிச்சல் |
| | | 4. செட்டிபாளையம் |
| | | 5. வேலம்பாளையம் |
| | | 6. தொட்டிபாளையம்(பகுதி) |
| | | 7. மண்ணரை |
| | | 8. திருப்பூர் |
| | | 9. ஆண்டிபாளையம் |
| | | 10. மங்கலம் |
| | | 11. இடுவாய் |
| | | 12. வீரபாண்டி |
| | | 13. முத்தணம்பாளையம் |
| | | 14. நல்லூர் |
| | | 15. முதலிபாளையம் |
| | | 16. நாச்சிபாளையம் |
| | | 17. பெருந்தொழுவு |
| | | 18. தொங்குட்டிபாளையம் |
| | | 19. உகயனூர் |
| | | 20. வட—அவினாசிபாளையம் |
| | | 21. அலகுமலை |
| | | 22. கண்டியன் கோவில் |
| | | 23. தென்—அவினாசிபாளையம் |
| | | **அவினாசி வட்டம்** |
| | | 20. தெக்கலூர் |
| | | 21. செம்பை நல்லூர் |
| | | 22. வேலாயுதம் பாளையம் |
| | | 23. புதுப்பாளையம் |
| | | 24. கனியாம்பூண்டி |
| | | 25. ராக்கியாபாளையம் |
| | | 26. பழங்கரை |
| | | 27. அவனாசி |
| | | 34. ஈட்டி வீரம்பாளையம் |
| | | 40. பெருமாநல்லூர் |
| | | 41. காளிபாளையம் |
| | | 77. செங்கம்பள்ளி |
| | | 78. முத்தம்பாளையம் |
| | | 79. புஞ்சை ஊத்துக்குளி |
| | | 82. அக்ரகார பெரியபாளையம் |
| | | 83. சர்க்கார் பெரியபாளையம் |

**உள்ளூர் திட்டப் பகுதியாக அமையும் பகுதி**

| *தொ. எண்.* | *உள்ளூர் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண்ணும் பெயரும்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3* |
| 1. *தொடர்ச்சி.—* | *திருப்பூர் உள்ளூர் திட்டமிடல் பகுதி.—தொடர்ச்சி* | ***பல்லடம் வட்டம்.*** |
| | | 1. சாமளாபுரம் |
| | | 2. இச்சிப்பட்டி |
| | | 3. புமலூர் |
| | | 4. வேலம்பாளையம் |
| | | 5. சுக்காம்பாளையம் |
| | | 6. செம்மிபாளையம் |
| | | 7. கோடங்கி பாளையம் |
| | | 8. பருவாய் |
| | | 9. க. அய்யம்பாளையம் |
| | | 10. கரடிபாவி |
| | | 11. மல்லே கவுண்டம் பாளையம் |
| | | 12. புளியம்பட்டி |
| | | 13. கே. கிருஷ்ணாபுரம் |
| | | 14. அனுப்பட்டி |
| | | 15. பணிக்கம்பட்டி |
| | | 16. சித்தம்பலம் |
| | | 17. வடுகபாளையம் |
| | | 18. பல்லடம் |
| | | 19. நாரணாபுரம் |
| | | 20. கரைபுதூர் |
| | | 21. கணபதிபாளையம் |
| | | 22. பொங்கலூர் |
| | | 23. மாதப்பூர் |
| | | 24. ஏலவந்தி |
| | | 25. கேத்தனூர் |
| | | 26. வாவிபாளையம் |
| | | 27. வி. வடமலைபாளையம் |
| | | 28. கே. காளிபாளையம் |
| | | 29. காட்டூர் |

**கே. பணீந்திரரெட்டி,**
*அரசுச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிப்பெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(J1) த்துறை,

## அறிவிக்கை

*[அரசாணை (2D) எண்.24, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை 12–07–2012.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியிலும் **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (பி) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக, எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை, அல்லது கருத்துரை எவையேனுமிருப்பின் அவற்றை, சென்னை–**600 006**ல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் தமிழ்நாடு அரசு செயலாளர், தொழிலாளர்–வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை **600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வரைவு அறிவிக்கை

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3**ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியிலும், **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, **7–1–2009**ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் II–பிரிவு **2**இல் **10** மற்றும் **11**ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட **11(2)**/தொ.ந.வே.வா.**18/2009**ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழக ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் ஏதேனும் அரிசி ஆலை, மாவு ஆலை மற்றும் பருப்பு ஆலை ஆகியவற்றில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:–

### விவர அட்டவணை

ஏதேனும் அரிசி ஆலை, மாவு ஆலை மற்றும் பருப்பு ஆலையில் வேலை வாய்ப்பு

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *நாளொன்றுக்கு குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | ஹமாலிஸ் (மூட்டை சுமந்து செல்பவர்கள்) | 108.00 |
| 2. | மூட்டையை எடையிடும் கட்டா மஸ்தூர் | 106.00 |
| 3. | மூட்டையைத் தைப்பவர்கள் | 106.00 |
| 4. | உமியை சுமந்து செல்பவர்கள் | 102.00 |
| 5. | பல்வகைத் தொழிலாளர்கள் உட்பட மஸ்தூர்கள் | 102.00 |
| 6. | அரிசியை சுமந்து செல்பவர்கள் | 102.00 |
| 7. | இஞ்சின் ஓட்டுநர் | 114.00 |
| 8. | மின்கம்பியாளர் | 114.00 |
| 9. | தீ பற்றவைப்பவர் | 102.50 |
| 10. | பொருத்துநர் | 106.00 |
| 11. | உமிநீக்குபவர் | 102.50 |
| 12. | மேஸ்திரிகள் | 108.00 |
| 13. | இயந்திரக்கம்மியர் | 108.00 |
| 14. | எண்ணெய் இடுபவர் | 102.00 |
| 15. | நெல் கொதிகலன் பணியாளர் | 106.00 |
| 16. | நெல் இயந்திர ஓட்டுநர் | 102.00 |
| 17. | நெல் அரைவையாளர் | 102.00 |
| 18. | துப்புரவுப் பணியாளர் | 102.00 |

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *நாளொன்றுக்கு குறைந்த அளவு அடிப்படை ஊதியங்கள்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 19. | தோடு நீக்குபவர் | 102.00 |
| 20. | புடைப்பவர் | 102.00 |
| 21. | நெல் ஊறவைப்பவர் | 102.00 |
| 22. | நீரை எடுத்துச்செல்பவர் | 102.00 |
| 23. | காவலாள் | 102.00 |
| 24. | அரிசியை மெருகேற்றும் பணியில் அமர்த்தப்பட்டுள்ள மஸ்தூர் | 102.00 |
| 25. | அரிசியை அளப்பவர் | 102.50 |
| 26. | தானியத்தை அரைக்கும் பணியில் அமர்த்தப்பட்டுள்ள மஸ்தூர் | 102.00 |
| 27. | பருப்பு உற்பத்தியாளர்கள் | 102.00 |
| 28. | சுமைதூக்குபவர் | 102.00 |
| 29. | அலுவலக உதவியாளர்கள் | 102.00 |
| 30. | தச்சர்கள் | 106.00 |
| 31. | வறுகடலைத் தொழிலாளர்கள் | 108.00 |
| 32. | எழுத்தர் | திங்களொன்றுக்கு 2935.00 |
| 33. | ஏவலாட்கள் | திங்களொன்றுக்கு 2760.00 |

**விளக்கங்கள்—**

**1.** தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2000ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475 ஆகும்.) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு, கூடுதலாக 21 காசுகள் (இருபத்தோரு காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு அதாவது, ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(2) (i) நாட்கூலி வீதங்கள் மற்றும் அகவிலைப்படியில் விடுமுறை நாள் ஊதியங்களும் அடங்கும்.

(ii) நாட்கூலியைக் கணக்கிட, மாத ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(iii) மாத ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

**3.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில், ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக் கூடாது.

**4.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்.**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**மற்றும் வேலைவாய்ப்புத்(J1)த் துறை, 12–07–2012.]**

*[அரசாணை (2D) எண்யே 26, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 12–07–2012.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்மரிவிலும் 3ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவின் (c) பகுதியிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக, எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை சென்னை–600 006ல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக தமிழ்நாடு அரசு செயலாளர், தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 19–11–2008ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2இல் 379–380–ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/548/2008 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள சோப்பு தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ளோருக்கு கீழ்க்காணும் விவர அட்டவணையின் (3) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளோருமான வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:–

## விவர அட்டவணை

### சோப்பு தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு.

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | ரூ. காசு. |
| 1 | முதலாள்/மேற்பார்வையாளர்/வேதியியலாளர் | 155.00 நாளொன்றுக்கு |
| 2 | கொதிகலன் இயக்குபவர்/சோப்பு தயாரிப்பு பொருட்களை கலக்குபவர்/வேதியிலாளர் | 149.50 நாளொன்றுக்கு |
| 3 | சோப்பு வெட்டுபவர் | 144.00 நாளொன்றுக்கு |
| 4 | முத்திரையிடுபவர் | 141.50 நாளொன்றுக்கு |
| 5 | சிப்பம் செய்பவர் | |
| | (அ) சோப்பு வெட்டி ஒன்றுக்கு | 140.50 நாளொன்றுக்கு |
| | (ஆ) பெயர்சீட்டு ஒட்டுதல் | 5.11 கிராஸ் (12 டஜன் ஒன்றுக்கு ரூ.140.50 என்று உத்தரவாதம்அளிக்கப்பட்ட காலவரையறைகளை வீதத்திற்கு உட்பட்டு |
| 6. | பல்வகைத் தொழிலாளர்கள்: | |
| | (அ) உட்பகுதி | 140.50 நாளொன்றுக்கு |
| | (ஆ) வெளிப்பகுதி | 140.50 நாளொன்றுக்கு |
| 7. | அலுவலகப் பையன் | 140.50 நாளொன்றுக்கு |
| 8. | வேன் ஓட்டுநர்கள் | 4005.00 மாதம் ஒன்றுக்கு |
| 9. | எழுத்தர் | 3849.00 மாதம் ஒன்றுக்கு |
| 10. | கணக்காளர் | 4005.00 மாதம் ஒன்றுக்கு |
| 11. | தட்டச்சர் | 4005.00 மாதம் ஒன்றுக்கு |
| 12. | காசாளர் | 4005.00 மாதம் ஒன்றுக்கு |
| 13. | விற்பனையாளர் | 3849.00 மாதம் ஒன்றுக்கு |

**விளக்கம்**

அகவிலைப்படி: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன், தொழிலாளர்களுக்கு பின்வரும் அகவிலைப்படி வழங்கப்படும்.

(1) (i) அகவிலைப்படியானது, 2000ஆம் ஆண்டு சென்னை மாநருக்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டெண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, கணக்கிட்டு வந்த 475 புள்ளிகள். 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி, மாதமொன்றுக்கு ரூ.8.10 (எட்டு ரூபாய் பத்து காசுகள் மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி திருத்தமானது, முந்தைய 12 திங்கள் கால அளவிற்கான அதாவது ஜனவரி முதல் டிசம்பர் திங்கள் வரையிலான கால அளவிற்குரிய சராசரி குறியீட்டெண்களின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டுக்கான சென்னை மாநகருக்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டெண்ணின் அடிப்படையில் இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இந்த முதல் கணக்கீடு, செயலுக்கு வரும்.

(2) ஆண், பெண் தொழிலாளர்கள் ஒரே தன்மையுடைய வேலையை செய்யும்போது ஊதியம் வழங்குவதில் ஆண் பெண் தொழிலாளர்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது.

(3) (i) நாள் ஊதியத்தைக் கணக்கிட திங்கள் ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(ii) திங்கள் ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

(4) இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும், தற்போது வழங்கப்படும் ஊதியங்கள் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (2D) எண். 36, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 31–07–2012.]*

1948–ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் வரைவு அறிவிக்கை, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக, எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின் அதனை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948–ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 19–11–2008ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2இல் 379 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/ தொ.ந.வே.வா/547/2008 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழக ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் அப்பளம் தயாரிக்கும் தொழிற்சாலையில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:–

**அப்பளம் தயாரிக்கும் தொழிற்சாலையின் வேலைவாய்ப்பு**

| | பணியாளர்களின் வகைகள் | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் | |
|---|---|---|---|
| | | மண்டலம்–I<br>ரூ. காசு | மண்டலம்–II<br>ரூ. காசு. |
| 1. | சிப்பம் செய்பவர். | 2898.00<br>மாதம் ஒன்றுக்கு | 2793.00<br>மாதம் ஒன்றுக்கு |
| 2. | கணக்காளர் | 2995.00<br>மாதம் ஒன்றுக்கு | 2898.00<br>மாதம் ஒன்றுக்கு |
| 3. | எடைபோடுபவர்/உதவியாளர் | 2898.00<br>மாதம் ஒன்றுக்கு | 2793.00<br>மாதம் ஒன்றுக்கு |

| | | | |
|---|---|---|---|
| 4. | நறுக்குதல் (100 கிலோ கிராம் ஒன்றுக்கு) | 237.90 | 179.33 |
| 5. | கலவையாக்குதல் (100 கிலோ கிராம் ஒன்றுக்கு) | 278.16 | 204.96 |
| 6. | அப்பளம் தயாரிக்கும் தொழற்சாலை | | |
| (i) | அப்பளங்கள் (3 அங்குலம்) அல்லது 7.6.செ.மீ (விட்டம்) 100 எண்ணிக்கை (300 கிராம்) | 4.61 | 3.31 |
| (ii) | அப்பளங்கள் (4 அங்குலம்) அல்லது 10.2 செ.மீ. (விட்டம்) 100 எண்ணிக்கை (400 கிராம்) | 5.89 | 4.34 |
| (iii) | அப்பளங்கள் (5 அங்குலம்) அல்லது 12.7 செ.மீ (விட்டம்) 100 எண்ணிக்கை (500 கிராம்) | 8.71 | 6.41 |
| (iv) | அப்பளங்கள் (6 அங்குலம்) அல்லது 15.2 செ.மீ. (விட்டம்) 100 எண்ணிக்கை (700 கிராம்) | 9.73 | 7.19 |

**விளக்கங்கள்:**

(1) மண்டலம் I மற்றும் மண்டலம் II கீழ்க்கண்ட பகுதிகளைக் கொண்டுள்ளது.

மண்டலம்–I சிறப்பு மற்றும் தேர்வுநிலை நகரியங்கள் உட்பட அனைத்து மாநகராட்சிகள் மற்றும் சிறப்புநிலை மற்றும் தேர்வுநிலை நகராட்சிகள்.

மண்டலம் – II ஏனைய இடங்கள்.

(2) அகவிலைப்படி: பணியாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் கீழ்க்குறிப்பிட்டவாறு அகவிலைப்படி வழங்கப்படும்.

(i) அகவிலைப்படியானது, 2000ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்), 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்களொன்றுக்கு கூடுதலாக ரூ 5.85 (ஐந்து ரூபாய் எண்பத்தைந்து காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது, முந்தைய 12 மாதங்களுக்கான, அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவோராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே வழங்கப்படும் ஊதியத்தில் எவ்விதப் பாகுபாடும் காட்டக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாத ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரே,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்.**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கை

*[அரசாணை (2D) எண்பே 38, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 31–07–2012.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் **(**மத்தியச் சட்டம் **11/1948) 3**ஆம் உட்பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியிலும் **5**ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவின் (c) பகுதியிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்பக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த வரைவு அறிவிக்கை, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், மேற்சொன்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர் ஏதேனும் நபரிடமிருந்து வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருந்தால், அவற்றை, சென்னை**–600 006–**ல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர்மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**–600 009** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

### வரைவு அறிவிக்கை

**1948** ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் **(**மத்தியச் சட்டம் **11/1948) 3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **22–09–2004** ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம் II-பிரிவு **2**ல், **410–411** பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)LE**–598–2008** ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் வெட்டு மரத் தொழிலில் உள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

### வெட்டுமரத் தொழிலில் வேலைவாய்ப்பு

### விவர அட்டவணை

**வெண்கலம் மற்றும் செப்பு பாத்திரங்கள தயாரிப்பில் வேலைவாய்ப்பு.**

| தொடர் எண் | பணியின் வகையில் | நாளொன்றுக்கு குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. காசு |
| I | பயிற்சி பெற்றவர்கள். | |
| 1. | வெட்டுபவர்/இயக்குபவர் | |
| 2. | ரம்பப் பணியாள் | நாளொன்றுக்கு |
| 3. | ரம்பத்தை கூர்மை செய்பவர். | |
| 4. | அனைத்து ரம்ப இயந்திர ஓட்டுநர் இயக்குபவர் | ரூ **166.00** |
| 5. | மேலொட்டுமான இயந்திரத்தை இயக்குபவர். | |
| 6. | மின்கம்பியாள். | |
| 7. | முதலாள் | |
| 8. | கடைசல் பிடிக்கும் இயந்திரத்தை இயக்குபவர். | |
| 9. | கொதிகலன் இயக்குபவர். | |
| 10. | இயந்திரக் கம்மியர் | |
| 11. | தச்சர். | |

| | | | |
|---|---|---|---|
| II | **ஓரளவு பயிற்சி பெற்றவர்.** | | |
| 1. | மெருகிடுபவர் | | |
| 2. | சிப்பம் செய்பவர்மரச்சட்டங்களைக் கொண்டு சிப்பம் செயதல் | | |
| 3. | பெட்டி தயாரித்தல் (சிப்பம் செய்தல்) | | நாளொன்றுக்கு ரூ. 159.00 |
| 4. | அனைத்து ரம்ப இயக்குபவருக்கு உதவி செய்பவர். | | |
| 5. | மரக்கட்டை உதவியாள். | | |

**III பயிற்சி பெற்றவர்**

| | | |
|---|---|---|
| 1. | வெட்டுமரத் துண்டுகளை சுமப்பவர்கள். | |
| 2. | பொதுவான உதவியாள் | |
| 3. | சிப்ப உதவியாள். | |
| 4. | பயிற்சி பெறாத உதவியாள். | நாளொன்றுக்கு ரூ. 152.50 |
| 5. | காவலாள். | |
| 6. | வண்டிக்காரர். | |
| 7. | சரக்குத்தொகுதி உதவியாள். | |

**அகவிலைப்படி:**

மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், கீழே குறிப்பிடப்பட்டவாறு பின்வரும் அகவிலைப்படி வழங்கப்படும்.

(i) அகவிலைப்படி, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர் சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டெண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982–100 என்பவதன் அடிப்படையில் 475 புள்ளிகள்) 475 புள்ளிகளைக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் நாளொன்றுக்கு 32 காசுகள் (முப்பத்திரண்டு காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியில் இருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாதாந்திர ஊதிய வீதங்களைக் கணக்கிட, குறைந்தளவு தின ஊதியத்தை (அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி) 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழக்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம், அதே ஊதியங்கள் தொடர்ந்து வழக்கப்பட வேண்டும்.

*(அரசாணை (2D) எண் 39, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (J1)த் துறை, 13–08–2012.*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவுலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவான முடிவடைவதற்கு முன்னர் இது தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை, அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின் அதனை, சென்னை–600 006–ல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர்மூலமாக தமிழ்நாடு அரசுச் செயலாளர், தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 19–11–2008 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2–ல், 380–382 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் வேலை வாய்ப்பு துறையின் II-2/தொ.வே.வா./1549/2008 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், செங்கற்கள் மற்றும் ஓடுகள் தயாரிப்புத் தொழிற்சாலையில் பணியமர்த்தப்பட்டுள்ளோருக்கு கீழ்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும் பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுளளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

**செங்கற்கள் ஓடுகள் தயாரிப்புத் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு.**

| *தொடர் எண்* | *தொழிலாளர்களின் வகைகள்* | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| **தொகுதி–I–(தேர்ச்சிப் பெற்ற தொழிலாளர்கள்)** | | **ரூ.** |
| 1. | கருமார்கள் | 2527–00 (மாதம் ஒன்றுக்கு) |
| 2. | மரவேலை செய்பவர்கள் (குச்சர்கள்) | 2527–00 (மாதம் ஒன்றுக்கு) |
| 3. | பொருத்துநர்கள் | 2586.00 (மாதம் ஒன்றுக்கு) |
| 4. | மின்கம்மியர்கள் | 2586.00 (மாதம் ஒன்றுக்கு) |
| 5. | எந்திர கம்மியர் | 2527.00 (மாதம் ஒன்றுக்கு) |
| 6. | கொத்தனார்கள் | 2527.00 (மாதம் ஒன்றுக்கு) |
| 7. | இயக்குபவர்கள் | 2527.00 (மாதம் ஒன்றுக்கு) |
| 8. | என்ஜின் ஓட்டுநர்கள் | 2527.00 (மாதம் ஒன்றுக்கு) |
| 9. | பற்றவைப்பவர்கள் | 2527.00 (மாதம் ஒன்றுக்கு) |
| 10. | அச்சு தயாரிப்பவர்கள் | 2586.00 (மாதம் ஒன்றுக்கு) |
| **தொகுதி–II நிலை–I தொழிலாளர்கள்** | | |
| 1. | அச்சு உதவியாளர்கள் (Mould Helpers) | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 2. | மண்ணை அழுத்தி வழவழப்பாக்குபவர் | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 3. | செங்கற்களைத் தயாரிப்பவர்கள் (அல்லது) ஓடுகள் தயாரிப்பவர்கள் | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 4. | அச்சிலிருந்து எடுப்பவர்கள் (Die Pullers) | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 5. | களிமண்ணை துண்டமாக வெட்டுபவர் மற்றும் மண்ணை மிதிப்பவர் | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 6. | களிமண்ணை கலப்பவர்கள் | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 7. | செங்கற் சூளையில் சுமை ஏற்றுபவர் மற்றும் இறக்குபவர் | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 8. | சூளையிற் சுட்ட செங்கற்களை வகைப்படுத்துபவர்கள் மற்றும் சிப்பம் செய்பவர்கள் (அடுக்குவது உள்பட) | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 9. | உருளையை சுழற்றுபவர்கள் | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 10. | ஓடுகளை ஒழுங்காக வெட்டுபவர்கள் (Tile Trimmers) | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 11. | செயற்கை முறையில் செங்கற்களை உலர வைக்கும் பணியில் ஈடுபடும் உதவியாளர்கள். | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 12. | சூளை எரிப்பவர்கள் | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |
| 13. | பாதுகாவலர் அல்லது காவலாள். | ரூ.91.50 (நாள் ஒன்றுக்கு) |

**தொகுதி–III நிலை–II தொழிலாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பொருட்களைக் கையாளும் தொழிலாளர்கள் | ரூ.64.50 (நாள் ஒன்றுக்கு) |
| 2. | பொருட்களைக் கொண்டு செல்பவர்கள் | ரூ.64.50 (நாள் ஒன்றுக்கு) |
| 3. | உதவியாளர்கள் | ரூ.64.50 (நாள் ஒன்றுக்கு) |
| 4. | ஓடுகளைக் கொண்டு செல்பவர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 5. | எரிபொருட்களைக் கொண்டு செல்பவர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 6. | களிமண்ணை கொண்டு செல்பவர்கள் மற்றும் எடுத்துச் செல்பவர்கள். | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 7. | ஏற்றி இறக்கும் பணியை மேற்கொள்ளும் உதவியாளர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 8. | பாளங்களை வெட்டுபவர்கள் மற்றும் பாளங்களை எடுத்துச் செல்பவர்கள். | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 9. | களிமண் வழங்குவோர் (Clay Feeders) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 10. | பொதுவான கூலிவேலை செய்யும் தொழிலாளர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 11. | சிலாப் பிளேசர்ஸ் (slabe placers) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 12. | துப்புரவாளர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 13. | சட்டத்திலிருந்து சுடப்படாத ஓடுகளை எடுப்பவர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 14. | சுடப்படாத செங்கற்கள் மற்றும் ஓடுகளை எடுத்துச் செல்பவர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 15. | செங்கல் தயாரிப்பு கருவியை வழங்குபவர்கள் (Pallet Suppliers) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 16. | செங்கல் தயாரிப்பு கருவியை சேகரிப்பவர்கள் (Pallet Collection) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 17. | நீர்கொண்டு செல்பவர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 18. | மணல் மற்றும் சிமிட்டியை கலப்பவர்கள் (மொசைக்) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 19. | மொசைக் கற்களை தலைச் சுமையாக எடுத்துச் செல்லும் தொழிலாளர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 20. | மணல் வழங்குபவர்கள் (மொசைக்) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 21. | ஓடுகளை ஒட்டுபவர்கள் (மொசைக்) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 22. | பெட்டி அகற்றுபவர் (மொசைக்) (Box Removers) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 23. | வண்ணங்கள் கலப்பவர்கள் (மொசைக்) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 24. | சிப்ஸ்களை நேர்த்தியாக்குபவர் (Chips Screamers) | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |
| 25. | I, II மற்றும் IV ஆம் தொகுதியின்கீழ் குறிப்பிடப்படாத ஏனைய தொழிலாளர்கள் | ரூ.85.50 (நாள் ஒன்றுக்கு) |

**தொகுதி IV–தொழிலாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | முதலாள் | ரூ.3188.00 திங்கள் ஒன்றுக்கு |
| 2. | தொழில்நுட்ப மேற்பார்வையாளர் | ரூ.2952.00 திங்கள் ஒன்றுக்கு |
| 3. | மேற்பார்வையாளர் | ரூ.2708.00 திங்கள் ஒன்றுக்கு |
| 4. | எழுத்தர் | ரூ.2647.00 திங்கள் ஒன்றுக்கு |
| 5. | கணக்காளர் | ரூ.2952.00 திங்கள் ஒன்றுக்கு |
| 6. | பண்டகக் காப்பாளர் | ரூ.2708.00 திங்கள் ஒன்றுக்கு |
| 7. | அலுவலகப் பையன் | ரூ.2291.00 திங்கள் ஒன்றுக்கு |
| 8. | (i) மேஸ்திரி | ரூ.2647.00 திங்கள் ஒன்றுக்கு |
| | (ii) மேஸ்திரி | |
| | (12 ஆண்டுகளுக்குக் மேலாக மேஸ்திரியாக பணியாற்றியவர்கள்) | ரூ.2754.00 திங்கள் ஒன்றுக்கு |

**செங்கல் தயாரிப்புக்கான கூலி:–**

| | | |
|---|---|---|
| 1. | 1000 எண்ணிக்கையிலான சூளை செங்கற்களுக்கு | ரூ.255.05 |

| | | |
|---|---|---|
| 2. | 1000 எண்ணிக்கையிலான நாட்டு செங்கற்களுக்கு | ரூ.191.37 |
| 3. | 1000 எண்ணிக்கையிலான செங்கற்களை சூளைக்கு கொண்டு செல்ல | ரூ.128.16 |
| 4. | 1000 எண்ணிக்கையிலான மேசை வார்ப்பு செங்கற்களுக்கு (Table Mould Bricks) | ரூ.319.13 |
| 5. | 1000 எண்ணிக்கையிலான செங்கற்களை சூளையிலிருந்து ஏற்றி இறக்க | ரூ.32.07 |
| | சூளைக்கு மணலைக் கொண்டுவந்து சேம்பரில் பரப்புவதற்கு | ரூ.76.05 |
| | விறகு அல்லது நிலக்கரியை கொண்டுவர டன்னிற்கு | ரூ.65.07 |
| | (அ) சூளையை எரிப்பவர் | 103.50 நாள் ஒன்றுற்கு |
| | (ஆ) மேசை வார்ப்பு செங்கற்களை வெட்டி எடுத்து ஒழுங்காக அடுக்குவதற்கு | 320.24 1000 எண்ணிக்கையுடைய செங்கற்களுக்கு |
| | (இ) சேம்பர் செங்கற்களுக்கு | 255.05 1000 எண்ணிக்கையுடைய *செங்கற்களுக்கு* |
| | (ஈ) செங்கல் அளவு (வரையறுக்கப்பட்ட செங்கல் அளவு 9X4½X3") செங்கற்களுக்கு) | 191.36 1000 எண்ணிக்கையுடைய செங்கற்களுக்கு |

22.5 செ.மீ. X 11.25 செ.மீ. X 7.5 செ.மீ. 100 அடி தொலைவிற்குள் சுமை ஏற்ற வேண்டும் 100 அடி தொலைவிற்கு மேலாகச் சென்று சுமை ஏற்றப்படுமானால் அதற்கு பரஸ்பர ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொகை வழங்கப்படும்.

மொசைக் ஓடுகள் தயாரிப்பதற்கான ஊதியங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிமிட்டியிலான தனிவகை ஓடுகள் | (i) ஓடுகள் தயாரிப்பாளருக்கு | ரூ.காசு 114.00 நாள் ஒன்றுக்கு |
| 2. | மொசைக் ஓடுகள் | (ii) கலப்பவர் (Mixer) கலப்பதற்கானபடி | 91.50 நாள் ஒன்றுக்கு |
| | | (iii) உதவியாள் | 13.20 நாள் ஒன்றுக்கு |
| 3. | சிமிட்டி ஓடுகளை பதிப்பவர்கள் | | 91.50 நாள் ஒன்றுக்கு |
| 4. | அச்சு இயக்குபவர்கள் | | 91.50 நாள் ஒன்றுக்கு |

**விளக்கங்கள்:—**

1. மழைக்காலங்களில் பணி தொடங்கப்பட்ட பின்னர், மழையின் காரணமாக தொழிலாளர்கள் பணியை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுமாயின் பணி முடிக்கப்படுவதற்கு வழக்கமாக எவ்வளவு ஊதியத்தை அவர்கள் ஈட்டியிருப்பார்களோ, அத்தொகையில் 50 சதவித தொகையைப் பெற அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

2. அகவிலைப்படி மேலே நிர்ணயிக்கப்பட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் தொழிலாளர்களுக்கு பின்வரும் அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) 2000 ஆம் ஆண்டு சென்னை மாநகருக்கான நுகர்வோர் சராசரி விலைப்புள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டு வந்த 475 புள்ளிகள், மேற்கூறிய 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு அகவிலைப்படியாக 17 காசுகள் (பதினேழு காசுகள் மட்டும்) வழக்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி திருத்தமானது முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை நுகர்வோர் சராசரி விலைப்புள்ளியின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் விலைப்புள்ளி சராசரி எண்ணை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அகவிலைப்படியின் முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

3. அன்றாட ஊதிய வீதம் மற்றும் அகவிலைப்படி என்பதில், விடுமுறை நாள் ஊதியமும் அடங்கும்.

4. (i) நாட்கூலியைக் கணக்கிட மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்கு வேண்டும்.

(ii) மாத கூலியைக் கணக்கிட நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

5. ஆண், பெண் தொழிலாளர்கள் ஒரே தன்மையுடைய வேலையை செய்யும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே பாகுபாடு காட்டக்கூடாது.

6. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் (மத்திய சட்டம் 63/1946) மற்றும் ஏனைய தொழிலாளர் நலச்சட்டங்கள் ஆகியவற்றின்கீழ் வராத செங்கல் மற்றும் ஓடுகள், முதலியவற்றை தயாரிக்கும் தொழிலில் பணியிலமர்த்தப்பட்டுளளவர்களும் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு, தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1958) கீழ் விடுப்புக்கால பயன்கள், நோய்க்கான சலுகைகள் அல்லது விடுமுறைகள் ஆகியவற்றையும், வருங்கால வைப்புநிதி மற்றும் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சலுகை ஆகியவற்றையும் பயன்படுத்த இயலாதவர்கள், மேற்சொன்ன சலுகைகளுக்குப் பதிலாக தொகுதி–I-II மற்றும் தொகுதி–IIIன்கீழ் வரும் தொழிலாளர்களாக இருப்பின் அவர்களுக்கு நாளொன்றுக்கு 18.99 ரூபாயும், தொகுதி–II கீழ்வரும் தொழிலாளர் மற்றும் ஏனைய தொழிலாளர் அல்லது பணிக்காக, நாள் ஒன்றுக்கு 16.28 ரூபாயும், கூடுதலாக வழக்கப்பட வேண்டும்.

7. இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போது வழங்கப்படும் ஊதியங்கள் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம் அதே ஊதியங்கள் தொடர்ந்து வழக்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ்வளர்ச்சி அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிப்பெயர்ப்பு)த் துறை.*

*கடித எண் 27738A/மொ.பெ./2012, நாள் 18–10–2012.*

*(அரசாணை (2D) எண் 46, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (J1)த் துறை, 5–10–2012.*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 23–08–2006 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2–ல், 287–288 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)LE/23–08–2006 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்து பின்னரும் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள, தமிழ்நாடு மாநிலத்தில் ஊதுவத்தி தயாரிக்கும் வேலையில் உள்ள பணியாளர்களின் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இந்த அறிவிக்கையின் வரைவு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**ஊதுவத்தி தயாரிப்பு தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்.* | *பணியாளர்களின் வகைகள்* | *மாதமொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்.* | | | |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | | |
| | | மண்டலம்–A | மண்டலம்–B | மண்டலம்–C | மண்டலம்–D |
| | | (i) | (ii) | (iii) | (iv) |
| | | ரூபாய்–காசுகள் | ரூபாய்–காசுகள் | ரூபாய்–காசுகள் | ரூபாய்–காசுகள் |
| **I.** | **தயாரிப்பு பிரிவு.** | | | | |
| 1. | செப்பமுறா வத்திகளைச் சுற்றுதல் | 2547.00 | 2482.00 | 2415.00 | 2349.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | (தொழிற்சாலைகளில்) | | | | |
| 2. | (a) சிப்பம் செய்தல் | 2614.00 | 2547.00 | 2482.00 | 2415.00 |
| | (b) வாசனை திரவத்தை தெளித்தல் அல்லது வாசனை திரவத்தில் முக்குதல் உட்பட | 2865.00 | 2785.00 | 2713.00 | 2640.00 |
| **II.** | **நிருவாகப் பிரிவு** | | | | |
| 1. | தட்டச்சர் | 2581.00 | 2515.00 | 2448.00 | 2383.00 |
| 2. | எழுத்தர் | 2561.00 | 2494.00 | 2429.00 | 2362.00 |
| 3. | மேற்பார்வையாளர் | 2614.00 | 2547.00 | 2482.00 | 2415.00 |
| 4. | மேலாளர் | 2878.00 | 2746.00 | 2565.00 | 2614.00 |
| 5. | ஓட்டுநர் (மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தில் தொழிலாளர் என்ற பொருள் விளக்கத்தின்கீழ் வருகிற ஓட்டுநர்கள் தவிர) | 2746.00 | 2680.00 | 2614.00 | 2547.00 |
| 6. | காவலாள் அல்லது அலுவலக உதவியாளர் அல்லது சிற்றேவலர் அல்லது ஏவலாள் | 2349.00 | 2283.00 | 2251.00 | 2211.00 |
| **III.** | **விற்பனை பிரிவு.** | | | | |
| (a) | விற்பனை பணியாளர் | 2614.00 | 2349.00 | 2217.00 | 2085.00 |
| (b) | உதவி விற்பனை பணியாளர் | 2349.00 | 2283.00 | 2251.00 | 2217.00 |
| IV. | ஏனைய வகையினர் | 2349.00 | 2283.00 | 2251.00 | 2217.00 |
| **மேற்சொன்னவற்றின்கீழ் வராத ஏனைய பணியாளர் வகையினர்** | | | | | |
| V. | செப்பமுறா வத்திகளைச் சுற்றுதல் | | | | |
| (a) | 6'' வரை செப்பமுறா 1000 வத்திகளைச் சுற்றுவதற்கு | 18.11 | 17.60 | 17.08 | 16.56 |
| (b) | 6'' மேற்பட்ட செப்பமுறா 1000 வத்திகளைச் சுற்றுவதற்கு | 22.25 | 21.74 | 21.22 | 20.70 |

குறிப்பு: மண்டலங்களில் வகைப்பாடு வருமாறு:—

மண்டலம்—A அனைத்து மாநகராட்சிகள்

மண்டலம்—B அனைத்து நகராட்சிகள்

மண்டலம்—C அனைத்து நகரியங்கள், பேரூராட்சிகள் மற்றும் பாளையங்கள்

மண்டலம்—D மண்டலம் A,B மற்றும் C—யில் வராத ஏனைய பகுதிகள்

விளக்கங்கள்:—

1. அகவிலைப்படி:—(தொழிலகப் பணியாளர்களுக்கு இணையாக வீட்டில் வத்தி சுற்றுகிற பணியாளர்களுக்கு) 1000 வத்திகளைச் சுற்றுவதற்கு ரூபாய் 20.60 என்ற வீதத்தில் அகவிலைப்படி கணக்கீடு செய்யப்படும். இருப்பினும் நாளொன்றில் சுற்றப்படுகிற வத்திகளின் எண்ணிக்கை 3000—க்கு மேற்பட்டாலும் கூட அதிகளவு அகவிலைப்படி, ரூபாய் 61.80க்கு மேற்படக்கூடாது.

அகவிலைபடி:— (தொழிலகப் பணீயாளர்களுக்கு)

2. அகவிலைப்படி 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர் சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டெண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982—100 என்பதன் அடிப்படையில் 475 புள்ளிகள்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் நாளொன்றுக்கு ரூபாய் 4.35 காசுகள் (ரூபாய் நான்கு மற்றும் முப்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியில் இருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(ii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர் நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(iv) நாட்கூலி வீதங்களைக் கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(v) மாதந்திர ஊதிய வீதங்களைக் கணக்கிட, குறைந்தளவு தின ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(vi) ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(vii) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம், அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.